061

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சமூக கற்கைகள் துறை
சமூக விஞ்ஞானத்திற்கான சான்றிதழ் கற்கைநெறி , மட்டம் - 1
இறுதிப் பரீட்சை - 2007
பொருளியலுக்கான அடிப்படை - SSF 1303

காலம் - மூன்று (3) மணித்தியாலங்கள்

திகதி: 10.10.2007 நேரம்: மு.ப.09.30 – 12..30 வரை

**ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**
**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்க**
**வரைபுகள், கருதுகோள் தரவுகள் , உதாரணங்களை கையாண்டு விடையளிப்பின் கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.**

பகுதி – 1

1. (i) (அ) பொருளியல் வளங்கள் எவை? (05புள்ளிகள்)
   (ஆ) "வளங்கள் அருமையானது" விளக்குக. (07புள்ளிகள்)
   (ii) பொருத்தமான உதாரணங்களுடன் சந்தர்ப்பச்செலவினை விளக்குக. (08புள்ளிகள்

2. (அ) அடிப்படை பொருளியல் பிரச்சினைகளை பட்டியலிட்டு முதலாளித்துவ பொருளாதார முறையில் இப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகின்றது? (10புள்ளிகள்)
   (ஆ) தொழிற் பிரிப்பினை வரைவிலக்கணப்படுத்துக. தொழிற் பிரிப்பின் அனுகூலங்களை விளக்குக. (10புள்ளிகள்)

3. பின்வருவனவற்றில் ஏதாவது இரண்டிற்கு (02) சிறுகுறிப்பு எழுதுக.
   (அ) விலைமுறையும் , பண்டமாற்றுமுறையும்
   (ஆ) உற்பத்தி சாத்திய வளையி
   (இ) பொருளாதாரவளர்ச்சியும்,பொருளாதாரஉறுதிப்பாடும். (10புள்ளிகள் வீதம்)

பகுதி – 2

4. (அ) நிறைபோட்டிச் சந்தையின் நான்கு (04) இயல்பினை சுருக்கமாக விளக்குக. (10புள்ளிகள்)
   (ஆ) பின்வருவனவற்றில் மாற்றம் நிகழும்போது கேள்வியில் என்ன நடைபெறும்
      (i) பெற்றோலின் விலை அதிகரிக்கும் போது (05புள்ளிகள்)
      (ii) சீனியின் விலை குறைவடையும் போது (05புள்ளிகள்)

5. (அ) நிரம்பல் நெகிழ்ச்சி என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை விளக்குக (10புள்ளிகள்)

(ஆ) ஒரு விற்பனை வரியானது நுகர்வோர், உற்பத்தியாளர்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் யாது? (10புள்ளிகள்)

6. பின்வருவனவற்றில் ஏதாவது நான்கிற்கு (04) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) உத்தரவாத விலையும், கள்ளச்சந்தை விலையும்

(ஆ) சமநிலையும் , அரசாங்கத் தலையீடும்.

(இ) பதிலீட்டுப் பொருட்களும் , கேள்வி நெகிழ்ச்சியும்

(ஈ) மிகைக் கேள்வியும் , மிகை நிரம்பலும்

(உ) தனிநபர் கேள்வியும் , சந்தைக் கேள்வியும் (05புள்ளிகள் வீதம்)

பகுதி - 3

7. பின்வருவனவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியும் , மொத்த தேசிய உற்பத்தியும்

(ஆ) நடைமுறைவிலையிலும் , சந்தை விலையிலும் தேசிய வருமானத் தரவுகள்

(இ) ஆள்வீத வருமானமும் , வீட்டுத்துறையினரது வருமானமும்

(ஈ) காரணி விலையும் , சந்தை விலையும் (05புள்ளிகள் வீதம்)

8. (ஆ) தேசிய வருமான கணிப்பீட்டு முறைகளில் ஒன்றினை விளக்குக. (10புள்ளிகள்)

(ஆ) (i) இரட்டைக் கணிப்பு என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? (05புள்ளிகள்)

(ii) தேசிய வருமான எண்ணக்கருவிற்கு எதிரான விமர்சனங்கள் நான்கினை (04) எழுதுக. (05புள்ளிகள்)

9. பின்வருவனவற்றில் ஏதாவது நான்கிற்கு (04) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) வருமான சுற்றோட்டம்

(ஆ) சேர்க்கப்பட்ட பெறுமதி

(இ) முதன்நிலை பொருளாதார நடவடிக்கை

(ஈ) பேரினப் பொருளியல்

(உ) பண்டச் சந்தை (05புள்ளிகள் வீதம்)

(பதிப்புரிமையுடையது)

LIBRARY